
Pam



# சங்கநாதம்
# SANGANATHAM

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



17

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் – கொழும்பு

Youth League For Sanathana Dharmic Perception

# தலைநகரில் புதுப்பொழிவுடன் ஆரியப்பட்டர் பாலமந்திர்

சனாதன தர்மபூவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் மற்றுமொரு உன்னத சேவையில் பாடசாலை மாணவர்கள் நன்மை கருதி ***ஆரியப்பட்டர் பாலமந்திர் அறநெறிப் பாடசாலை*** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்துமதத்தில் காணப்படும் அனைத்து விடயங்களும் வெளிப்படுத்தி மிக இலகுவான முறையில் மாணவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் திறமை மிக்க ஆசிரியர்கள் கற்பிக்கப்படுகின்றன.

**இடம்** : ஆனந்தசாகர
இல 42, சிறபறிகார்டின்
கொழும்பு -04

**நேரம்** : ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 09.00 - 11.30

முன்னோர்கள் விட்டுச்சென்ற இந்து தர்மத்தின் வழி நடந்து எதிர்கால சந்ததியினருக்கு இந்து தர்மத்தைக் கையளிப்பதற்கு உங்கள் செல்வங்களை வழி நடத்திச் செல்ல இவ் ஆரியப்பட்டர் பால மந்திர் பாடசாலை என்றும் கை கொடுக்கும்.

**இன்றே வாரீர்!**
**நன்றே பயில்வீர்!**

## ஆலோசனைக்குழு

வண. சுவாமி தந்திரதேவ மகராஜ்
(இந்து சமய அபிவிருத்தி சபைத் தலைவர் திருகோணமலை)

வண. பூர்ணாநந்தகிரி சுவாமிகள்
(மடாதிபதி கதிர்காமம்)

திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம்

தமிழவேள் இ.க.கந்தசுவாமி

திரு. இ. ஜெயராஜ் (அ.இ.க.கழகம்)

திரு.க.விநாயகசோதி
(நம்.பொறுப்பாளர் சிவானந்த தபோவனம்)

செல்வி கு.குமாரலஷ்மி
(காப்பாளர் சனாதனதர்ம பூவ விழிப்புணர்ச்சிக்கழகம்)

36393



# ஞானகோஷம்


பழைய ஏற்பாட்டில் ஜெனஸிஸ் அத்தியாயத்தில் (பைபிளின் 1ஆம் பக்கம் சிருஷ்டி நேரத்தில்) கடவுள் வாக்களிக்கின்றார். **பூலோகத்தில் மனித குலத்திற்குச் சகல கீரை வகைகள், தானியங்கள் கொடுக்கின்றேன். இதுதான் அவனுடைய மாமிசம்.** ஆகவே பைபிளில் மரக்கறி உணவுதான் மனிதனுக்கு உகந்தது என்று பைபிளில் கடவுள் கட்டளை அளித்தார். இயேசு ஒரு வெஜிரேறியன். இச் செய்தி எஸ்ஸீன் ஏடுகளிலிருந்து தெளிவாக வெளிப்படுகின்றது. இவ் எஸ்லின் ஏடுகள் நவீன காலத்தில் பாதுகாப்பாக வத்திக்கான் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ் ஏடுகளில் மாமிசம் சாப்பிடுபவர்கள், மிருகங்களைக் கொல்பவர்கள் நரகத்துக்குப் போவார்கள் என்று இயேசு எச்சரிக்கை விட்டிருக்கிறார். மேலும் இயற்கையுடன் ஜீவிக்க வேண்டுமென்று ஊக்குவித்தார். பூமி என்பது உலகத்தாய். பரமாத்மன் என்பது பரலோகத் தந்தை என்று விசித்திரமான முறையில் இயேசு விபரித்தார்.

இவ் எஸ்ஸீன் வாசகங்களில் இயேசுவிடம் ஒரு சிஷ்யன் விசாரித்தான். மோசஸ் சில இறைச்சி வகைகள் சாப்பிட அனுமதித்தார். நீங்கள் ஏன் சகல இறைச்சி வகைகளையும் தவிர்க்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்? இயேசு பதிலளித்தார். மோசஸ் காலத்தில் மக்கள் மிக்க கொடூரமான குணத்தோடு இருந்தார்கள். அவர்கள் தாவர உணவு சாஸ்திரம் முழுக்கக் கடைப்பிடிக்க முடியாது என்ற காரணத்தால் சில இறைச்சி வகைகள் சாப்பிட முடியும் என்று மோசஸ் அனுமதித்தார். இன்னொருவன் இயேசுவிடம் கேட்டார் நீங்கள் உபந்நியாசிக்கறீர்கள் மிருகங்களைக் கொலை செய்யக்கூடாது என்று ஆனால் ஒருவன் காடு செல்லும் போது காட்டு மிருகம் ஒன்று அவனுடைய சிநேகிதனைத் தாக்கினால் என்ன செய்ய வேண்டும்? ஆம் தற்பாதுகாப்புக்காக மிருகத்தைக் கொலை செய்யலாம். என்று இயேசு பதிலளித்தார். ஆனால் இயேசு மேலும் கூறினார் வேடிக்கையாக அல்லது உணவுக்காக எந்த ஒரு மிருகத்தையும் கொலைசெய்யக் கூடாது. இவ்வாறான வகையில் இயேசு அஹிம்சை, தாவர உணவு கடைப்பிடிக்கும் முறை பற்றிப் பிரசாரித்தார்.


வண. சுவாமி. திந்திரதேவா



# தீபத்திருநாளின் வரலாற்றுப்பின்னணி



சூரியன் ஐப்பசி மாதம் துலாராசியில் நுழைகிறார். அப்போது திரயோதசி இரவு சதுர்தசி அதிகாலையில் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகின்றது.



தீபாவளி நம்முடைய பண்பாட்டோடும் வரலாற்றோடும் இணைந்துள்ள ஒரு சமுதாயத் திருவிழா. புராணத்தில் கண்ணபிரான் நரகாசுரனை வதைத்தநாள் இது என்று கூறப்படுகின்றது. இவ்வுலகை இன்பமயமானதாகச் சொர்க்க பூமியாக மாற்றக் கூடிய மனிதர்களும், சக்தியும், தேவர்களாகவும் தர்மசக்தியாகவும் நமது புராணங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது. நரகாசுரன் என்பவன் தனக்குக் கிடைத்த வரங்களின் பலத்தாலும் தனது சாஸ்திர வலிமையினாலும் செருக்குற்று முனிவர்களையும், நல்லோரையும் தேவர்களையும் இம்சித்துக் கொண்டிருந்தான். பெண்களைத் தூக்கிச் சென்று சிறைவைத்தான்.

தேவர்களின் பிரார்த்தனையை ஏற்று ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு நரகாசுரனோடு யுத்தம் செய்து அவனை வதைத்து நலிந்தோர்க்கு நல்வாழ்வை அளித்த நாள் இது. நரகாசுரனின் தாய் பூமாதேவி தனது மகனின் மரணத்தைப் பூவுலகம் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று வேண்டிக்கொள்ள ஸ்ரீ கிருஷ்ணன் அந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்கிறார். அதன் காரணமாகவே இந்நாளில் குதூகலத்தோடு அனைவரும் தமது உள்ளங்கள் பூரிக்க மத்தாப்புகள் முதலான வாண வேடிக்கைகளோடும் நாவிற்கினிய இன்சுவைப் பண்டங்களோடும் உடலிற்கும் உள்ளத்திற்கும் மகிழ்வளிக்கும் புத்தாடைகளோடும் இன்பத் திருநாளாக இதனைக் கொண்டாடி வருகின்றனர்.

மகாபலி என்ற அசுரனின் பிடியிலிருந்து தங்களைக் காப்பாற்றும்படி ஸ்ரீமத் நாராயணனிடம் தேவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். அதனால் ஸ்ரீமத் நாராயணன் வாமன வடிவம் எடுத்து அந்தணச் சிறுவனாகக் கையில் குடையுடன் தோன்றி, மகாபலியிடம் மூன்று அடி நிலம் கேட்டார். மகா பலியும் அதற்கு இசைந்தார்.

விசுவரூபம் எடுத்த வாமனன் (ஐப்பசி மாதம் திரயோதசி அன்று) முதல் 3 தினங்களில் தமது காலால் மூன்று உலகங்களையும் அளந்தார். மூன்றாவது அடியை மகாபலியின் சிரத்திலே வைத்துஅழுத்தி அடக்கினார். அப்போது மகாபலி தங்களுக்கு நான் ஆண்ட உலகங்களைத் தானமாகக் கொடுத்த இந்த 3 நாட்களில் நடுவில் உள்ள சதுர்த்தி அன்று இரவின் முடிவில் மக்கள் எண்ணெய் தேய்த்துக்குளித்துப் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடக் கொண்டாட வேண்டும், எங்கும் இருள் அகன்று ஒளி பரவவேண்டும் என வரம் அருளும்படி வேண்டினான். பெருமானும் அவ்விதமே வரமளித்தார். அந்த நாளே தீபாவளி நன்னாளாகும் என்ற ஒரு புராணக்கதையும் உண்டு.

***இராமாயணத்தில் தீபாவளி*** 14 ஆண்டுகள் வனவாசம் முடித்து விட்டு அயோத்தி திரும்பிய ஸ்ரீராமன், லட்சுமணன் ஆகியோர்களை அயோத்தி மக்கள் வீடுகளில் தீபம் ஏற்றி, புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அந்நாளே தீபாவளி என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

***திருமாலின் திருமணநாள் தீபாவளி*** பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய பல்வேறு பொருட்களுடன் மூதேவியும் மகாலஷ்மியும் தோன்றினார்கள். மகாலஷ்மி திருமாலைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினாள். அப்போது மூத்தவளான என் திருமணத்திற்குப் பிறகுதான் மகாலட்சுமியின் திருமணம் நடைபெற வேண்டும் என்று மூதேவி கூறினாள். அவளைத் திருமணம் செய்து கொள்ள அனைவரும் தயங்கினார்கள். அப்போது உத்தாலகர் என்ற முனிவர் முன்வந்து மூதேவியைத் திருமணம் செய்து கொள்வதற்கு ஒப்புக் கொண்டார். மூதேவிக்குத் திருமணம் நடைபெற்றது. பின்பு மகாலட்சுமியின் திருமணம் நடைபெற்றது. மகாலஷ்மியின் திருமண நாளே தீபாவளி என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு பல்வேறுபட்ட கதைகள் கூறப்படுகின்றது.

தமஸோ மா ஜ்யோதிர்கமய என்ற உபநிடத வாக்கியத்தை ஒரு பாமர மனிதனுடைய வாழ்விலே இணைக்கிற ஒரு திருவிழா தீபாவளி. அறியாமை, வறுமை, வலிமையின்மை, அதர்மம் இவையனைத்தையும் இருளாக உருவாக்கப் படுத்துவதுதான் தமது மரபு. அறியாமை நீங்கி அறிவு



நிறைகின்ற போது வறுமை நீங்கி வளம் கொழிக்கின்ற போது பலவீனம் நீங்கி வலிமை பெருகுகின்ற போது அதர்மம் அழிந்து தர்மம் தழைக்கின்ற போது இருள் நீங்கி ஒளி பிறப்பதாக ஐதீகம் சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் மேற்கண்ட இருளை நீக்கி நிரந்தர ஒளியை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என்று நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்ளும் திருநாள் தீபாவளி.

### தீபாவளி எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும்?

தீபாவளி நாளில் சூரிய உதயத்திற்கு 6 நாழிகைக்கு முன்பாகவே நீராடவேண்டும். அன்றைய தினம் எண்ணெய்த் திருமகளையும், வெந்நீரில் புனித கங்கையையும் வரப்பண்ணி நீராடவேண்டும். அன்று எண்ணெய் தேய்த்து நீராடுவதால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்கும். நரகாசுரனின் தீய குணங்கள் மறைந்து அவனிடம் காருண்யம் பெருக்கெடுத்தது. ஆதலால் அவன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் எம்பெருமானே தாங்கள் கங்கையில் கூறி இந்த உலகிலுள்ள நீரில் எல்லாம் இந்த நன்னாளில் மட்டும் கங்கை எழுந்தருள அருள்புரிய வேண்டும் என்று வேண்டினார். அதற்குப் பெருமானும் இசைந்தார். கங்காதேவியும் அதன்படி அன்று அதிகாலை மட்டும் எல்லா நீரிலும் ஆவாகனமாகி விடுகிறாள்.

### சிவனை வழிபடும் விரதமாகவும் தீபாவளி கொண்டாடப் படுகின்றது.

தீபத்தை வரிசையாக வைத்துச் சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாள் தீபாவளி என்று பாரத மக்கள் கூறுகின்றனர். தீபாவளி அன்று பகல், இரவு முழுவதும் பட்டினி இருந்து இரவில் தீபங்களை வரிசையாக வைத்துச் சிவபூஜை செய்து எண்ணெய் தேய்த்து நீராடி, சிவபூஜை செய்து விடியமுன் புத்தாடை உடுத்தி, உணவு உண்டு கொண்டாடுவதே தீபாவளி விரதமாகும்.

சிவபெருமானை வழிபடும் எட்டு விரதங்களுள் கேதார விரதமும் ஒன்றாகும். இவ்விரதத்தை வைத்து அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து இருபத்தொரு இழைகொண்ட நூலைக்கையில் புனைந்து அர்ச்சனை செய்து

தூபதீப நிவேதனம் புரிந்து வழிபட வேண்டும். ஐப்பசி மாத அமவாசைக்கு முந்தைய நாள் சதுர்த்தியன்று அதிகாலையில் எழுந்து நீராடித் தூய்மையான ஆடை உடுத்தி நெல்லின் மீது நிறைகுடம் வைத்து மாவிலையும் தர்ப்பையும் வைத்து அதில் சிவமூர்த்தியை பிரதிஷ்டை செய்து சிவமாகவே பாவனை புரிந்து பக்திபரவசமாக அர்ச்சித்துப் பாராயணம் புரிந்து தூபதீப நிவேதனங்கள் செய்து வழிபடவேண்டும்.

மறுநாள் அமாவாசையன்று காப்பை அவிழ்த்துவிட்டு உணவருந்த வேண்டும். இந்த விரதம் கோதார விரதம் எனப்படும். இந்த விரதத்தைக் கௌதம முனிவர் கூறி உமையம்மையார் நோற்று இறைவனுடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார். கௌரி நோற்ற காரணத்தால் கேதார கௌரி விரதம் எனவும் பெயர் பெற்றது. இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்க முடியாதவர்கள் ஐப்பசித் தேய்பிறைச் சதுர்தசியன்று மட்டும் மேற்கூறிய விரதத்தை முறைப்படி அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு தீபாவளி தினத்தோடு தொடர்புடையதாக் கேதாரகௌரி விரதம் விளங்குகின்றது.

தொகுப்பு **S. யாகரன்.**

## சங்கத்தமிழ் (இந்து) மன்றத்தின் பாதையில்.........

நவராத்திரி விழாவை முன்னிட்டு மன்றத்தினால் நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் 23.10.2001 அன்று வழங்கப்பட்டது.

இம்மன்றத்தின் அடுத்த திகழ்ச்சியாக அறநெறிப் பாடசாலையின் மாணவர்களுக்கு மருத்துவமுகாம், திருத்தல யாத்திரை, ஆண்டிறுதிப் பரீட்சை என்பன அடுத்த மாதம் நடைபெற இருக்கின்றன.



# நாடக பாணியில் நலந்தரும் குறள்

காமத்துப்பால் முழுவதுமே நாடகப்பாணியில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். பொருட்பாலிலும் இரு குறள்களைக் கற்பனையாக ஒருவரை உருவகித்து அவர் வாயிலாக கருத்தை புலப்படுத்துவதைக் காணமுடிகிறது.

**இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு** (குறள் 1048)

வறுமைத் துன்பத்தை தீயிலும் கொடியது என்கிறார் வள்ளுவர். நெருப்பைக் கொடிதாக எண்ண வேண்டாம். வறுமைத் துன்பமோ அதனிலும் கொடியது என்று அனுபவித்தவனே நேரில் அதன் அனுபவத்தை விளக்குவதாக அமையும் போது சொல்லப்படும் பொருள் வலிமை பெறுவதைக் காண்கிறோம்.

நேற்று என்னைக் கொல்ல வந்தது போல துன்புறுத்திய வறுமை இன்றும் வருமோ வந்தால் ஐயோ நான் என்ன செய்வேன் என்று வறியவன் கூறும்போது அவன் உடல் நடுங்குவது நம் மனக்கண்ணில் தோன்றுகிறது. நெருப்பிலே கூட உறங்கலாம். வறுமையில் உறங்குவது இயலாது என்று அவன் உரைக்கும் போது இரக்கம் ஏற்படுகிறது.

இதேபோன்று படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் முதலாவது குறளில் படைத்தலைவனின் பெருமையை வீரன் ஒருவன் கூறுவதாக அமைந்துள்ளார்.

**என்ஐமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்ஐ**
**முன்நின்று கல்நின் றவர்** (குறள் 771)

பகைவரே! இதற்கு முன்பு என் தலைவனது வல்லமையை வீரத்தின் சிறப்பை நீங்கள் அறியவில்லை போலும். தலைவனுக்கு எதிராக நின்று போர் செய்தவர் எவரும் உயிரோடு திரும்பியதில்லை. என் தலைவன் முன்நின்று கல்லாய்ப் போனவர் பலர். ஆகையால் என் தலைவன் முன்னே போர் புரிய முன்வர வேண்டாம் என்று வீரன் ஒருவன் கூறுவதாக அமைத்துள்ளார். நூலாசிரியர் தன் கருத்தைத் தன் நிலையாது கூறாது வீரன் மூலமாக கூறுகிறார். காமத்துப் பாலில் மட்டுமல்ல பொருட்பாலிலும் இவ்வாறு வெண்பாவில் பாட முடியும் என இரு குறள்களை அமைத்து தனது கவிப் புலமையையும் திறமையையும் எடுத்துக் காட்டியிருக்கிறார் வள்ளுவர்.

**இ. சிறிஸ்கந்தராசா (திருக்குறள் சிந்தனையாளர்)**

# குடும்பம் ஓர் குருகுலம்


குடும்பத்திலிருந்து தான் சமுதாயம் அமைகிறது. சமுதாயத்தில் இசைவு, இணக்கம் வளர்வது, உயரிய பண்புப் பதிவுகள் வாய்ந்த மேலான தனி நபர்களை உருவாக்குவது, அண்டை அயலில் உள்ள மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரம், செடி, கொடி, கல், மண் முதலிய எல்லா அசையும், அசையா பொருட்களுடனும் பரஸ்பர ஒத்துழைப்புடன் கூடிய ஆன்மநேய நல்லுறவு கொள்ளுதல், நான் என்ற எண்ணம் குறைந்து நாம் என்ற சமுதாய உணர்வு வளர்தல் இந்த எல்லா விஷயங்களுக்கும் ஹிந்துக் குடும்ப அமைப்பே விளைநிலமாக இருந்து வந்துள்ளது.

இன்று உலகம் சுயநலத்தில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாகச் சந்தேகமும், வெறுப்பும், வன்முறையும் தலை விரித்தாடுகின்றன. மோதலுக்கே வாழ்நாள் சரியாகி விடுகிறது. சுரண்டலே கலாச்சாரம் என்று ஆகி விட்டது. அதெல்லாம் சரிதானா? என்று கேட்டால் சரியில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அதுசரி? என்ற கேள்விக்குப் பதில்தான் கிடைப்பதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்று உள்ளதற்கு மாற்று ஏற்பாடு ஹிந்து குடும்பம் என்று எல்லோருக்கும் தோன்றுகிறது. ஹிந்து குடும்பம் பெருமைக்குரியது என்றால் குடும்பத்திலுள்ளவர்கள் எண்ணிக்கையை வைத்து அல்ல, அவர்களின் உள்ளங்களை வைத்துத்தான். பரிவு, ஆன்மநேயம் போன்ற உணர்வுகளைக் கொண்டு பின்னியது குடும்பம். குடும்பம் என்பது குழந்தைகளுக்கு அறிவூட்டி, திசைகாட்டி, நம்பிக்கையூட்டி மனோதிடம் வளர்க்கும் ஓர் குருகுலம். இளைஞர்களுக்கு தானும் இன்பமடைந்து வீட்டாருக்கும், தேசத்திற்கும், உலகத்திற்கும் நலம் விளையப் பாடுபடத்தூண்டும் ஓர் தவச்சாலை. மூத்தோரிடம் இளையோர் மதிப்பும், மரியாதையுமாகப் பழகும் சரணாலயம்.

இப்படிப்பட்ட குடும்பத்தை உருவாக்க வேண்டுமானால் வீட்டலங்காரம் எப்படி இருக்க வேண்டும்? அங்கே நல்ல பண்புகளை ஊட்டும் ஏற்பாடு என்ன? அதில் வீட்டில் உள்ளவர்களின் பங்கு என்ன? வீட்டில் உள்ள ஒவ்வொருவரின் மன அமைப்பு எப்படி இருக்க வேண்டும் போன்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் நமது முன்னோர்கள் ஆழ்ந்து சிந்தித்திருந்தார்கள். எனவே ஹிந்து குடும்பத்தின் புறத்தோற்றம் எப்படி இருக்க வேண்டும்? அங்கே எப்படிப்பட்ட உயர்வு நிலவ வேண்டும் என்ற இரண்டு விஷயங்கள் பற்றியும் நாம் சிந்தனை செய்ய வேண்டும்.






முருகப் பெருமான் குறிஞ்சி நிலக்கடவுள் அதலினால் அநேகமாக அவருடைய கோவில்கள் எல்லாம் குன்றுகள் மீது காணப்படுகின்றன. அவருடைய ஆறுபடை வீடுகளில் முதலாவதாகத் திகழ்கின்றது திருப்பரங்குன்றம். இத்தகைய சிறப்புமிக்க திருப்பறங்குன்றம் பாண்டிய நாட்டைச் சேர்ந்தது. மதுரைக்குத் தெற்கில் ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ளது இத் திருப்பரங்குன்றம்.

கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் இருக்கும் இம் மலையில் அடிவாரத்தில் காணப்படும் கோவில் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய பூமிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் பழைமையான இக்கோவில் கலித்தொகை, அகம், பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது. இக் கோவில் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும் என்பதை பறைசாற்றியுள்ளது.

## குன்றின் உச்சியில் குமரனுக்கோர் குன்றம்
## திருப்பரங்குன்றம்

இவ்வாலயத்தின் வடக்குப்பகுதி நுழைவாயிலில் இராஜ கோபுரம் உள்ளது. இவ்வாலயம் மலையின் அடிவாரப்பகுதியில் இருந்து படிப்படியாக உயர்ந்து கற்றளியாகக் கட்டப்பெற்றது. இவ்வாலயத்தின் மூலஸ்தானம் பாறையைக் குடைந்து குடைவரையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இராஜ கோபுரத்துக்கு முன்புறம் ஆஸ்தான மண்டபத்தில் கருப்பண்ணசுவாமி சந்நிதி அமைந்துள்ளது. இவரை வழிபட்ட பின்னரே உள்ளே செல்ல வேண்டும் என்பது இங்குள்ள மரபு. இங்குள்ள தூண்களில் அழகிய சிற்பங்களாகக் கண்ணைக்கவரும்



வகையில் வடிவமைந்துள்ளது. விநாயகர், துர்க்கை, திரிபுராந்தகன் மற்றும் சுப்பிரமணியர் தெய்வானை திருமணக்காட்சியை விளக்கும் சிற்பங்கள் மிக்க எழில் வாய்ந்தவை. இது தவிர இந்திரன் தனது மகளை தாரை வார்த்துக் கொடுக்கும் திருமணக்காட்சி மிகமிக அருமையான காட்சியாகும். இது ஒரு அற்புதப் படைப்பாகும்.

கோபுர வாயிலைக் கடந்து உட்சென்றதும் இடப்பக்க வாயில் வழி இலக்குமி தீர்த்தத்திற்கு செல்கிறது. தீர்த்தக்குளத்துக்கு செல்லும் வழியில் இடப்புறம் ஒரு வேதபாடசாலையும் அதற்கு எதிரில் தலமரமான கல்லுத்தியும் தீர்த்தக் குளத்திற்கு மேற்புறம் தெற்கில் பிள்ளையார் சிற்றாலயம் அமைந்துள்ளது.

கொடி மர மண்டபத்தில் மயில் மூஞ்சூறு நந்தி வாகனங்கள் கருவறையை நோக்கி அமைந்துள்ளன. மகா மண்டபத்தில் இரட்டை விநாயகர், தேவியுடன் அதிகார நந்தி, சந்நிதிகள் உள்ளன. மண்டபத்தின் உட்புறம் வள்ளி தேவசேனா உடன் உறைய வீற்றிருக்கும் ஆறுமுகன் சந்நிதியின் முன்புறம் விநாயகர், நால்வர், அறுபத்து மூவர் தேவியர்களுடன் பஞ்சபூத இலிங்கங்கள், வைரவர், சனீஸ்வரர், சந்நிதிகள் உள்ளன. மகா மண்டபத்தில் சோமஸ்கந்தர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, நவவீரர்கள், சண்டிகேஸ்வரர், சந்நிதிகளைக் காணலாம்.

பாறையின் நடுவிலே மகிஷாசுரமரத்தினியின் திருவுருவச்சிலை உள்ளது. அவரை அடுத்து மேற்குப் பகுதியில் கனியை ஏந்திய விநாயகர், லிங்கவடிவில் சத்தியகிரீச்வரர் சுவரில் புடைப்புச் சிற்பமாக சோமாஸ்கந்தர், கோ பூஜை செய்யும் பற்பதி என்பன உள்ளன. இங்கே வேலுக்கே அபிஷேகம் நடைபெறுகின்றது. மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் அன்ன பூரணி மற்றும் தேவலோகக் காட்சியைப் புடைச்சிற்பங்களாகக் காணலாம். மண்டபத்தின் கீழே அம்பிகையின் தனிக்கோயிலைக் காணலாம். இங்கு நின்ற கோல அம்பிகை கிழக்கு நோக்கிய திருமுகம் திருச் சுற்றில் சண்டிகேஸ்வரி பள்ளியறைச் சந்நிதிகள் உள்ளன.

இத்திருப்பரங்குன்றினைச் சுற்றிப் பல கோயில்கள் உள்ளன. நக்கீரருக்குச் சரவணப் பொய்கையின் அருகில் ஒரு கோயில் உள்ளது. முன் மண்டபத்தைக் கடந்து சென்றால் கல்யாணமண்டபம் உள்ளது. மண்டப வாயிலின் மீது கோபுரம் 150 அடி உயரம் கொண்டு எழுப்பி உள்ளது. இங்குள்ள மகா மண்டபத்திற்கு படியேறிச் செல்ல வேண்டும். கோவிலின் முன் மண்டபம் திருமலை நாயகரால் கட்டப்பட்டது. இத்தகைய கலைச்சிறப்பு வாய்ந்த ஆலயத்துக்குச் சென்று கலையினையும், கடவுளினையும் தரிசித்து மனச்சாந்தியைப் பெறுவோமாக.

**பிரதீபா** (ச.த.யு.வி.க)





# இருமனம் இணையும் இருமனத்தின் அர்த்தங்கள் தான் என்ன?



## *மணவறை அலங்காரம்*

மணவறையானது நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். வெற்றிலைத்தட்டு, பழத்தட்டு, தேங்காய்த்தட்டு, பன்னீர்ச்செம்பு, சந்தனம், குங்குமம் முதலிய பொருட்கள் வைக்கப்பட்டு இருப்பதுடன் பூரண கும்பமும், குத்துவிளக்கும் வைக்கப் பட்டிருக்கும். திருமணத்தை நடாத்தும் சிவாச்சாரியார் தன் முன்பாக புண்ணியதானம் வைத்து அதன் அருகில் விநாயகரையும், கிண்ணத்தில் பஞ்சகவ்வியத்தையும் வைத்து இருப்பர். அரசாணி மரம் நன்கு அலங்கரித்து மணவறையின் நடுவில் அமைந்திருக்கும். அதன் இரண்டு பக்கத்தில் ஒரு பக்கத்திலே முளையிட்டு வளர்க்கப்பட்ட பாலிகைக் கும்பமும் நடுவில் அம்மியும், சிவன் பார்வதியாக பாவனை செய்யப்படும் கும்பமும் மறுபக்கம் நவக்கிரக கும்பமும் ஆக முன்பாக அரசாணிப்பானையும் நான்கு பக்கமும் நான்கு விளக்கும் அரசாணி மரத்தைச் சுற்றி நான்கு கும்பமும் அக்கினி சாட்சியாக திருமணம் நடைபெற யாக குண்டமும் உடையதாகக் கல்யாணம் இடம்பெறும் மணவறை அமைக்கப்பட்டிருக்கும்.

மணவறையிலே மணமகன் அமர்ந்திருக்க அவர் அருகில் தோழனும் அமர்ந்திருப்பார். இவர்களுக்கு முன்பாக திருமணத்தை நிகழ்த்தி வைப்பதற்காக சிவாச்சாரியார் அமர்ந்து திருமணக்கிரியை செய்வதற்கு ஆயத்தமாவர். மணமகன் வந்து அமர்ந்ததும் மணமகனுக்குக் கையில் நீர்விட்டு கையினை சுத்தம் செய்து விட்டு திருநீறு வழங்குவார். அதன் பின் பவித்திரம் கொடுத்து அதனை அணியச்செய்வர். பவித்திரத்தை மோதிர விரலில் அணிதல் வேண்டும். இது ஏன் அணிய வேண்டும் என்றால் இத் திருமணக்கிரியை முடியும் வரை ஒரு குற்றமும் ஏற்படாமல் இருத்தல் வேண்டும் என்பதற்கும் மனம் கிரியையின் வழி ஒன்றி நிற்க வேண்டும் என்பதற்குமாகும்.

இதன் பின் எந்தக் காரியமும் தொடங்கும் முன் வணங்க வேண்டிய மூத்தவன் விநாயகருக்குப் பூஜை நிகழும். இந்து சமய மரபுப்படி விநாயகர் வணக்கத்துடனே எந்தக் கிரியையையும் ஆரம்பமாவது மரபாகும். அந்த வகையில் விநாயகர் வணக்கத்துடன் சங்கற்பம் ஆரம்பமாகும். இத்திருமணச் சடங்கு குறையின்றி, தடங்கலின்றி இடம் பெற எல்லாம் வல்ல விநாயகரைத் துதித்தலே விநாயக பூஜையாகும்.

ஸ. விஜயந்தி

# மூதுரை (வாக்குண்டாம்)

11. துணைவலிமையின் மேன்மை

**பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டுஉமி போனால் முளையாதாம் கொண்டபேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி**
**ஏற்ற கருமம் செயல்.**

மேலே உள்ள உமி நீங்குவதற்கு முன்னர் முளைப்பது அரிசியே ஆனாலும் உமி நீங்கிப் போனால் அவ்வரிசி முளைக்காது; அது போல, அடைந்த பெரிய வல்லமை உடையவருக்கும் துணைவலிமை இல்லாமல் எடுத்துக் கொண்ட செயலைச் செய்து முடித்தல் இயலாது.
(விண்டுபோதல் - நீங்கிப்போதல்; அளவு - துணைவலிமை)

12. உருவு கண்டு எள்ளாமை

**மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்**
**உடற்சிறியர் என்றிருக்க வேண்டா - கடல் பெரிது**
**மண்நீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல்**
**உண்நீரும் ஆகி விடும்.**

தாழம்பூ மடல்களினாலே பெரிதாயிருக்கின்றது; மகிழம்பூ இதழ்களினால் சிறியதாக இருப்பினும் மணத்தினால் மிக இனியதாயிருக்கின்றது; கடல் மிகப் பெரிதாக இருக்கின்றது. ஆனால், அக்கடல் நீர் உடம்பழுக்கைப் போக்குதற்கும் தகுதி உடையதாகாது; அக்கடலின் பக்கத்தே சிறிய மணற்குழியில் ஊறும் நீர் பருகுதற்கும் சிறந்த நீராகிறது; அதனால் ஒருவரை உருவத்தினால் சிறியார் என எண்ணி அவமதிக்கவேண்டா அவர் ஆற்றல் மிக்கவராகவும் இருக்கலாம்.
(தாழை என்பதற்குத் தென்னைமரம் எனப் பொருள் காண்பர் நச்சினார்க்கினியர்; தாழை விழுக்குலை உதிரத்தாக்கி திருமுருகாற்றுப்படை; இவ்வடியின் உரை காண்க.)

13. கல்லாதவனின் இழிவு

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவைஅல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே**
**நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய**
**மாட்டா தவன்நல் மரம்.**



கிளைகளைக் கொண்டனவாகியும், கொம்புகளைக் கொண்டனவாகியும் காட்டினுள்ளே வளர்ந்து நிற்கின்ற அந்த மரங்கள் நல்ல மரங்கள் ஆகா; கற்றோர் கூடியுள்ள அவையின் நடுவே ஒருவர் நீட்டிய ஓலையைப் படிக்க மாட்டாமல் நின்றவனும், பிறருடைய குறிப்பை அறியமாட்டாதவனும் நல்ல மரங்களாகும்.
(கவை-கிளை-பெரியது; கொம்பு-சிறிய; சபை-அவை)

நூலகம்

14. கல்லாதான் கற்ற கல்வி

**கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்துத் தானும்தன்**
**பொல்லாச் சிறகை விரித்துஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி.**

கற்க வேண்டிய நூல்களை ஆசிரியரிடம் முறைப்படி கல்லாதவன், கற்றோர் கூறும் ஓர் கவியைக் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டு அக்கவியைப் பிறரிடம் எடுத்துக் கூறுதல், காட்டில் உள்ள மயில் தன் தோகையை விரித்து ஆட, அதனைப் பார்த்துக் கொண்டிருந்த வான் கோழியானது, தன்னையும் அம்மயிலாகவே எண்ணிக் கொண்டு, தன் அழகில்லாத சிறகை விரித்து ஆடினாற் போன்றதாகும்.
(பாவித்தல்-கருதுதல்-நினைத்தல்; பொல்லாச் சிறகு-அழகில்லாத சிறகு)

15. தீயோர்க்கு உதவுவதால் வரும் கேடு

**வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி**
**ஆங்குஅதனுக்கு ஆகாரம் ஆனால்போல்-பாங்குஅறியாப்**
**புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்**
**கல்லின்மேல் இட்ட கலம்.**

செத்துக்கிடந்த வரிகளையுடைய வேங்கைப்புலியின் விடநோயைத் தன் மந்திரத்தால் போக்கிப் பிழைக்க வைத்த விடநீக்கும் மருத்துவன், அப்பொழுது அப்புலிக்கு இரையானால் போல, நன்றி உணர்வு இல்லாத அற்பஅறிவினர்க்குச் செய்த உதவி, கல்லின் மேல் போடப்பட்ட மண்கலம் போல உடைந்து, செய்தவனுக்கே தீமையை விளைவிக்கும்.
(விடகாரி-நஞ்சை நீக்கும் மருத்துவன்)

# செய்திச் சஞ்சாரம்

## கல்விக் கருத்தரங்கு

கொழும்பு கல்வி வலய மாணவர்கள் கருதி கடந்த 23.10.01 செவ்வாய்க்கிழமை காலை 09.00 முதல் 03.30 மணிவரை கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கு இந்துநாகரீகக் கருத்தரங்கு பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கொழும்பு வலயப் பாடசாலையில் இருந்து சுமார் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்த கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஹேமாசர்மா அவர்களுக்கும் இக்கருத்தரங்கை சிறப்புற நடார்த்திய சனாதன யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்திற்கும் மாணவர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன் இவ்வாறான கருத்தரங்கை தங்களுக்கு ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

## யோகாசன பயிற்சிப் பட்டறையும் கருத்தரங்கும்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் யோகாசனக் குழுவினரால் கடந்த 31.10.01 புதன்கிழமை காலை 7மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யோகாசனப் பயிற்சிப் பட்டறையும் கருத்தரங்கும் நடாத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் காலஞ்சென்ற சித்தவைத்தியர் டாக்டர் சுரேஸ் அவர்கள் ஆற்றிய உரை அனைவரையும் பெரிதும் கவர்ந்தது. வர்மக்கலை சித்தவைத்தியம் என்பன தொடர்பான ஒரு அறிமுகத்தைவழங்கினார்.



மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வெள்ளைப் பூண்டு (உள்ளி) மிளகு வல்லாரை போன்ற மூலிகைகளின் ஆற்றல்களையும் அவற்றின் மூலம் மாரடைப்பு மூட்டுவாதம் ஞாபக மறதி போன்ற பல நோய்களைக் குணப்படுத்தும் முறையினையும் விளக்கினார். மேலும் ஆங்கில மருத்துவத்தைப் போல் இந்தமூலிகைகளினால் பக்க விளைவுகள் ஏற்படாது என்பதையும் சுட்டிக்காட்டினார். **காக்காய் கறிசமைத்து கருவாட்டுடன் உண்பாண் சுத்தசைவன்** போன்ற சித்தர்களின் பாடல்களுக்கு பொருள் கூறி அனைவரையும் கவர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து சனதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகத்தின் செயலாளர் டாக்டர் மனோகரன் அவர்கள் ஆசனம் பற்றிய பூரண விளக்கம் அளித்தார். யோகாசனம் பயிலும் மாணவர்கள் ஆசனங்களை செய்து காட்ட அவற்றின் நுட்பங்களையும் அவற்றின் மூலம் உடலின் உள்ளுறுப்புகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும் விளக்கினார். இக்கருத்தரங்கில் பெருந் தொகையானோர் கலந்து கொண்டுப் பயன் பெற்றனர்.

**இதோ சங்கநாதம் வழங்கும் பிறந்தநாள் பரிசு**

**வாசகர்களே!**

உங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர்களின் பிறந்தநாள் தினத்தை நாம் தரும் இக்கூப்பனில் பெயர், நட்சத்திரம், பிறந்த திகதி என்பவற்றை எழுதி அனுப்பினீர்களானால் அவர்களுடைய பெயருக்கு அர்ச்சனை நிகழ்த்திப் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெயர்:............................................................

திகதி:.............................. நட்சத்திரம்..............................

முகவரி:............................................................

அனுப்பவேண்டிய முகவரி
பிறந்தநாள் பரிசு
சங்கநாதம்
இல.03, ரிஜ்வே பிளேஸ்
கொழும்பு 04.

## இந்துக்கோயில்களின் இசைக்கலை

இசையுடன் இறைவன் புகழ் கூறும் தேவாரங்களை படிக்கும் போது பக்தி உணர்வு மேலிடுகின்றது. இராவணன் சாம கானம் இசைத்து இறைவனிடம் அழியாவரம் பெற்றான். அகத்தியர் இசையால் கற்பாறை உருகியது. இவை இசையின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன. தேவாரங்கள் பண்ணுடன் பாடித் துதிக்கும் தன்மை உடையன. தேவார முதலிகளின் தேவாரங்களுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாண மரபில் வந்த பெண்ணொருவர் பண் வகுத்தார்.

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது**

தேவாரங்கள் மூலம் இறைவனை இசைவடிவினனாய் கண்டு நாயன்மார்கள் துதித்தனர்.

**பண்ணுள்ளீராய்ப் பாட்டுமானீர்**
**பக்தர் சித்தம் பரவிக் கொண்டீர்**

எனச் சுந்தரர் இசை வடிவான இறைவன் புகழைப் போற்றிப் பாடினார். பல்லவர் காலத்தில் நாயன்மார்களினதும், ஆழ்வார்களினதும் பாடல்களில் கோயில்கள் வழியாக இசைவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஊமைப்பெண் ஒருத்தியால் வகுக்கப்பட்ட 103 பண்கள் இன்று வரை பண்ணிசை வல்ல ஓதுவார்கள் மூலம் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன.

கண்டராதித்த சோழ மன்னர் இசை விற்பனராகத் திகழ்ந்தார். சாரங்க தேவர் சங்கீத ரத்னாகரம் என்ற நூலை இயற்றினார். இந்நூலில் தக்கேசி, நட்டராகம், நட்டபாடை முதலிய பண்கள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருங் கோயிலில் பதிகம் ஓத 48 ஓதுவார்கள் இராஜ இராஜ சோழனால் நியமிக்கப்பட்டனர். பூசை வேளைகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஓதப்படுகின்றன. யாழ், குழல், கின்னரி, மத்தளம், உடுக்கை, முழவம் போன்ற இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டன. திருமுறைகளை இராகங்களில் பாடும் காலத்தில் இறைவன் நாத உபாசனை நிகழும்.

**பிரசாந்தி. த**



## எம்மதமும் சம்மதமா? எம்மதம் இந்து மதமா?



இந்துக்கள் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க லோக சமஸ்த சுக்கினோ பவந்து என்று கூறுகிறார்கள். ஏனென்றால் நாங்கள் ஒவ்வொரு இதயத்துள்ளும் மத, இன பேதமின்றி இறைவனைக் காண்கிறோம். ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களுடன் சமரசத்துடன் ஜீவிக்க விரும்புகிறோம். இறைவன் ஒன்று **ஏகம்சத்** ஒருவன் பரமசிவன் என்று சொல்லுவான், ஒருவன் பரமாத்மன் என்று சொல்லலாம், இன்னும் ஒருவன் மாவிஷ்ணு என்று சொல்லலாம், இன்னும் சிலர் பிதா, ஜெஹோவா, அல்லாஹ் முதலியன சொல்லலாம். எல்லாம் அதே இறைவன் தானே. ஆனால் இதற்காக எல்லா மதங்களும் உண்மை என நாம் கூறமுடியாது. உதாரணமாக ஆகாய விமான ரிக்கற் வாங்குபவர் யூ.கே, ஐக்கியராஜ்யம், இங்கிலாந்து, கிரேட் பிரடன் என்று ரிக்கற் கேட்டால் எல்லாம் ஒரு இடம் தானே. ஆயினும் இதற்காக எல்லா ஆகாய விமானங்களும் அங்கு தான் சென்றடையும் என கூறமுடியாது. ஏனெனில் சில ஆகாய விமானங்கள் அங்கு செல்ல மாட்டா. இவ்வகையில் இறைவன் ஒன்று. ஆனால் சகல மதங்களும் உண்மை என்று சொல்லமுடியாது. சில மதங்கள் ஒரே ஒரு பிறப்புத் தத்துவத்துடன் இருக்கின்றது. ஆனால் இந்துமதம் அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே இந்து மதத்தின் பிறப்புத் தத்துவம் உண்மையாக இருக்கலாம். அல்லது சில பிற மதங்களின் ஒரு பிறப்புத் தத்துவம் உண்மையாக இருக்கலாம். இரண்டு தத்துவங்களும் உண்மையாக இருக்க முடியாது. பசுவதை நல்ல செயலாக இருக்கலாம் அல்லது இந்து மத அடிப்படையில் பசுவதை தவிர்க்கவேண்டிய செயலாக இருக்கலாம், அதற்காக இரண்டு விடையங்களும் சரியான செயல் எனக்கூறமுடியாது. இந்துக்கள் பசுவதையை எதிர்க்க வேண்டும். இந்து மத தத்துவத்தின் அடிப்படையில் யாருக்கும் நிலையான நரகம் கிடைக்க மாட்டாது. ஜீவன் கர்ம வினை கோட்பாட்டு அடிப்படையில் பல பிறவிக்குப் பின் அவன் முக்தி பெறுவான். இறைவன் தாய், தந்தை போல் ஜீவனை தண்டிப்பார், அணைப்பார். நிலையான நரகம்

அடிப்படையில் கொடூரமான இறைவனை இந்து மதம் ஏற்றுக்கொள்ளவில்லை. இருக்கு வேதத்தில் சகல நதிகளும் கடலைச் சேருவதுபோல் பல ஆன்மீகப் பாதைகளும் இறைவனைச் சேரும் என கூறப்பட்டுள்ளது. சில விவேகமற்ற தவறான பாதையில் செல்லும் இந்துக்கள் இச்சுலோகம் காரணத்தால் இந்து மத கோட்பாடு எம்மதமும் சம்மதம் (எல்லா மதங்களும் உண்மை) என்றார்கள். இக்கருத்து ஒரு மாபெரும் தவறு; ஏனென்றால் இருக்கு வேத காலத்தில் இந்தியக் கண்டத்தில் இந்துமதம் மட்டுமே இருந்தது. இதனால் இச்சுலோகம் இந்துமதம் சம்மந்தமான பாதைகளைப் பற்றியேதான் கூறப்பட்டுள்ளது. இவ் இருக்கு வேத சுலோகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின் பிற தேசங்களில் இருந்து இறக்கப்பட்ட மதங்களைப் பற்றிக் கிடையாது. ஒருவன் புதிய மதம் தொடங்குகிறேன், முக்தியடையும் மார்க்கம் தினமும் மூன்று சிறிய பிள்ளைகளைப் பலி செய்ய வேண்டும் என்று கூறினால் இது உண்மை இருக்கு வேதத்தில் எல்லா மதங்களும் உண்மை எனக் கூறப்பட்டுள்ளது என்று சொல்வோமா? இல்லை. இம்மார்க்கம் கொடூரமானது உண்மை இல்லை என்று வலியுறுத்துவோம். ஆகவே இருக்கு வேத அடிப்படையில் காலம் காலமாக வந்த சகல மதக்கோட்பாடுகளும் உண்மை என்று நாம் கூறமுடியாது. மேலும் சிலர் திருமந்திரத்தில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது **எம்மதமும் சம்மதம்** என அஞ்ஞானத்துடன் கருதுகின்றார்கள். வேதாந்தம் என்றால் சரி, சித்தாந்தம் என்றால் சரி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றோம். ஒவ்வொரு இதயத்துக்குள்ளும் சமமாக இறைவனைக் காண்கின்றோம். அன்பு காட்டுகின்றோம், ஆனால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது எம்மதமும் சம்மதம் என்று கூறமுடியாது. திருமந்திரம் ஏனைய மதங்கள் சார்பில் போதிக்கவில்லை. திருமந்திரம் 3000 சுலோகங்கள் சிவஞானம் சிவ பக்தியைப் பற்றித்தான் கூறியுள்ளது. இந்து மதத்தின் மேலான கோட்பாடுகளை அறியாத சிலர் எம்மதமும் சம்மதம் என கூச்சலிடுகின்றார்கள். எம்மதமும் சம்மதம் என்ற பிரச்சாரத்தால் பல இந்துக்களிடையே இந்து மத தத்துவங்கள் மலிவான அப்பிராயத்தை உண்டு பண்ணியுள்ளது. எல்லா மதங்களும் உண்மை என்று சொன்னால் இந்து மதத்தைக் காப்பாற்ற










முடியாது. **எம் மதமும் சம்மதம்** போலி கொள்கை காரணத்தால் மதமாற்றம் தளைத்தோங்கிவிட்டது. எல்லா மதங்களும் உண்மை எல்லோரும் பிறந்த மதத்தை மட்டும் கடைப்பிடியுங்கள் போன்ற வார்த்தைகளால் இந்து மதம் பலவீனம் அடைகின்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், ஆதிசங்கரர், சைத்தன்யர் எம்மதமும் சம்மதம் எனக்கூறவில்லை. மதமாற்றத்தைத் தடுத்தார்கள். சுவாமி விவேகானந்தர் கூறினார் யார் இந்து மதத்தில் இருந்து விலகினாலும் அவர் மீண்டும் இந்து மதத்திலேயே சேரவேண்டும். ஒரு பாடசாலை அதிபர் சகல மாணவர்களுக்கும் பேதமின்றி சம அன்பு காட்டவேண்டும். ஆயினும் இதற்காக எல்லா மாணவர்களுக்கும் சம புள்ளிகளை அவர் கொடுக்க முடியாது. இவ்வகையில் நாங்கள் எல்லோரும் சம அன்பு காட்ட வேண்டும். இன்னும் எம்மதமும் சம்மதம் என கூறமுடியாது. எமது மதம் இந்து மதம்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

**சுவாமி தந்திரதேவா**

நூலகம்

## நீங்காத நினைவுடன்
## அமரர் Dr. Pa. சுரேஸ் அவர்களுக்குக்
## கண்ணீர் அஞ்சலிகள்.



கடந்த 04.11.2001 காலமான அமரர் Dr. Pa. சுரேஸ் அவர்கள் சித்தமருத்துவத்திற்கும், சனாதனதர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்திற்கும் சங்கநாத சஞ்சிகைக்கும் பேரிழப்பாகும்.

ஒருவருட காலமாகச் சங்கநாத சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதிப் பலரது பாராட்டைப் பெற்றவர். அதுமட்டுமல்லாது எமது கழகத்திற்கும் பல அளப்பெரிய சேவையாற்றி வந்தவராவார். இவரது எதிர்பாராத மறைவு எமது கழகத்திற்கு மாபெரும் இழப்பாகும்.

அன்னாரது நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டு நீங்காத நினைவலைகளாகும். அன்னாரின் புனித ஆத்மா சாந்தியடைந்து நற்கதியாம் சிவலோகப் பதவிடயடைய எங்கும் நிறைந்துள்ள இறையருளாம் குருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**கண்ணீருடன்**

**சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், சங்கநாதம்.**

## Founders of Science In Ancient India

Athavan - The First Discoverer of fire

If man could be right proud of any discovery it is the discovery of fire. It is difficult to evaluate the importance of this Fore most discovery today. When fire is common and our means of generating it are So simple. But think of the times when there was no fire on this earth, and when the sun alone was the source of light and heat. We do not possess the biographical details of the first discoverer of this fire . He is know to us by several name. Of which Athavan or Athavan is his personal name and being a discoverer of fire he came to e know as Angiras.. After him the whole Engrosses who became associated with Various Rgvedic hymns

In Greek mythology we have a reference to one Prometheus who stole fire from heaven and brought it to the earth. Prometheus is a legendry of mythological figure. Where as athavan is a man at hosiery. We have reasons to believer that the legend associate with name primitives also went from India to the outside country. The word Prometheus it self is derived from the Sanskrit combination pra-mantha Since the first fire was obtained by the process of churning or mantha. We shall gate a passage from the chamber's Encyclopedia in this connection.

"The religious history of its production, although everywhere we find that a rich mythology has gathered round the subject like all the chief manifestations of natural forces, fire was early person fied and worshiped, and we see a similar process personification and divinations in the names of the first fire givers the Greek prometheus , the pra mantha of the early Aryans, and his chines parrallel Sujjir"

Chambers Encyclopedic Fire

A Continues article will be published to readers for knowing the greatest contribution the Hindus have made to Science and Technology.



## சங்கநாதத்தின் ஸ்வரங்கள் இந்து அமைப்புக்கள்

மாத்தளை சனாதன தர்ம டுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
No. 38, Vihara Road, Matala. T.P 066-33014

இந்துசமய அபிவிருத்திசபை திருக்கோணமலை.
No. 100/13, Orrsil Trincomalee T.P 026-21113

மாத்தளை சனாதன தர்ம டுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
No. 30, Kandy Road, Nuwara Eliya T.P 052-23099

திவ்யஜீவனசங்கம் சிவானந்த தபோவனம்
உப்புவெளி திருக்கோணமலை. T.P 026-21469

அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலைகள் இணையம்
நற்பிட்டிமுனை கல்முனை T.P 067-21896

மயூராபதி இந்துசமய அறநெறிப்பாடசாலை.

விவேகானந்த நற்பணிமன்றம்
இல, 150. பிரதானவீதி தெஹிவோவிட்ட.

---

## மாணிக்க விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

கொழும்பு சம்மாங்கோடு அருள் மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய சிறப்பு மலர் 10.10.2001 மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளன்று வெளியிடப்பட்டுள்ளது. இம்மலர் ஜகத்குரு ஸ்ரீ சுயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியர் மகா சுவாமிகள் காஞ்சிக் காமகோடிப்பீடம் ஜகக்குரு ஸ்ரீ வியேஜெந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் காஞ்சிக் காமகோடிப்பீடம் சுவாமி ஆத்ம கணானந்தா உட்பட பலரது அருள் உரைகளுடன் மாணிக்க விநாயகர் ஆலய வரலாறு ஆலயத்தின் அமைப்பும் திருவுருங்களும் கிரியைகள் கணபதியும் கம்பியூட்டரும் போன்ற விளக்கங்களுடன் இன்னும் பல சுவையான அம்சங்களுடனும் அழகாக வெளிவந்துள்ளது. இம்மலர் நூற்றாண்டு காலம் கடந்து இனிவரும் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகத் திகழ சங்கநாதத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்..

## கண்டுபிடியுங்கள் பரிசினை வெல்லுங்கள் இல 03

200/= 150/= 100/=

இடமிருந்து வலமாகப் படித்தாலும் மேலிருந்து கீழாகப் படித்தாலும் மூன்று வார்த்தைகளும் மாறாது. இங்கே கட்டங்களுக்கான குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை வைத்து கட்டங்களைப் பூர்த்தி செய்து தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வையுங்கள்.

1.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

I. பிறை கண்டது போல
II. தனக்கென தனிவழியைக் கொண்டது
III. இந்தியாவின் நுழைவாயில் இங்கு அமைந்திருக்கும்.

2.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

I. பண்டைய காலத்தில் பதியை
II. அந்தக் கரணங்களில் ஒன்று
III. எஞ்சியவற்றை இப்படியும் கூறுவர்

3.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

I. உமாதேவியார்
II. ஆசை நீக்கியவன்
III. வெயில் காலங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும்

**கண்டுபிடியுங்கள் பரிசினை வெல்லுங்கள் இல 1ற்கான விடைகள்**

1. உதவி
தவளை
விளைவு

2. கதவா
தமிழ்
வாழ்வு

1ம் இடம் : Muniyandy Diresh Degallassa Lower Di Yatiyantota
2ம் இடம் : L. Kalaiyarasi No 792/9, Mandandawela Matala.
3ம் இடம் : Miss. S. Mahendini No. 257/26, Jorrington Avenue Colombo -05.



# கலியுகத்தில் கந்தசஷ்டி

கலியுகவரதன் சுப்பிரமணிய சுவாமிக்கு மூன்று விரதங்களில் மிகச் சிறந்தது கந்தசஷ்டி விரதம். சைவ சமயிகள் மற்றெல்லா விரதங்களையும் விட இந்தக் கந்தசஷ்டி விரதங்களை மிகவும் புனிதமாகவும் பக்திபூர்வமாகவும் கைக்கொள்கின்றார்கள். ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையையடுத்து வளர்பிறைப் பிரதமை முதல் சட்டியீறாகவுள்ள ஆறுநாட்கள் கந்தசஷ்டி விதரமாகும்.



பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்பது பழமொழி. இதற்கு வெளிப்படையாகச் சொற்பொருளை விட கந்தசஷ்டியில் விதரமிருந்தால் அகப்பையாகிய கருப்பையிலே கரு உண்டாகும் என்ற உட்கருத்துமுண்டு. பகல் பன்னிரண்டு நாழிகைக்குக் குறையாமல் பஞ்சமித் திதியும் அதன்பின் சஷ்டி வியாபகமும் எடுக்கும் நாள் சூரன் போருக்குரியது. இது பிரதமைத்திதியில் ஆரம்பமாகும்.

கந்தவிரதங்களுள் கந்தசஷ்டி என்பது உபவாசம் என்றுதான் எம் நினைவிற்கு வந்து விடுகிறது. உபவாசம் என்றால் உடன் உறைதல் அல்லது உடன் இருத்தல் என்பது பொருள். கந்தசஷ்டி உபவாசம் என்று கூறும்போது கந்தனோடு நெருங்கியிருந்து வாசம் செய்தல் என்ற கருத்தினைத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். கந்தக் கடவுளுடன் மிகவும் நெருங்கியிருப்பதற்கு நாம் நம்மைத் தகுதியுள்ளவர்கள் ஆக்கிக் கொள்ளுதல் அவசியம். தகுதிகளுள் புறத் தூய்மை, அகத்தூய்மை வேண்டும். புறத்தூய்மை என்பது எமது உடலையும் உடையையும் நாம் வாழுகின்ற வீடு, சுற்றாடல் என்பவற்றையும் வழிபாடு செய்கின்ற கோயில் பிரகாரங்களையும் சுத்தமாக வைத்திருத்தல். புறத்தூய்மை நீரால் அமையும் என்கிறார் வள்ளுவப் பெருமான். எனவே எமது உடலை நீராடுதல் மூலமும் உடைகளைக் கழுவுதல் மூலமும் வீடு, ஆலயம் அதன் பிரகாரங்களை அலகிடுதல், மெழுகுதல் கழுவுதல் மூலமும் புறத்தூய்மை ஏற்படுகிறது.

அடுத்து உபவாசத்திற்கு வேண்டப்படுவது அகத்தூய்மை எனும் தகுதி. உள்ளத்தில் உண்மை ஒளியை ஏற்படுத்தல் எமது மனத்தினை மாசுபடாது வைத்திருத்தல் என்பவை அகத்தூய்மையைத் தரும். அழுக்காறு, அவா, வெகுளி, பொறாமை, செருக்கு, அகந்தை, மமதை போன்றவைகள் எமது மனங்களில் அகற்றப்படும் போதுதான் மனத்தூய்மை உண்டாகின்றது.

பஞ்சப்புலன்களின் வழிமனதைப் போக்காமல் தடுப்பதன் மூலமே மனதைப் பாதுகாக்க முடியும். பஞ்சப் புலனைந்தும் நமக்கு வஞ்சனையையே செய்கின்றன என்கிறார் மாணிக்கவாசகர். மனம் பொறிகள், உடல் ஆகியவற்றைக் கட்டுப் படுத்துவதனால் அவற்றின் வழமையான செயற்படுகளைத் தவிர்த்து வேறு நல்ல செயற்பாடுகளுக்கு அவற்றைத் திசைகோட்படுத்த வேண்டும். நல்லனவற்றையே நினைத்தல் இறைவனைச் சிந்தித்தல் வாயால் இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், அவன் புகழ் பாடுதல், பேசுதல், இறைவனின் பெருமையைக் கேட்டல், உடம்பால் இறைபணி செய்தல், நன்னடத்தை பேணுதல் போன்ற செயற்பாடுகளால் இந்த நல்ல நோக்கத்தை எய்தமுடியும்.

விரதம் என்பது தவம் எனக்கொண்டு தமக்கு உற்ற துன்பங்களைப் பெற்றுக் கொள்வதும் பிற உயிர்களுக்கு விரதகாலங்களில் மாத்திர மன்று எக்காலங்களிலும் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுதல் நன்று.

முருகபக்தர்கள் ஒரு கடுந் தவமாகவே இவ்விரதத்தைக் கருதி ஆறு நாட்களும் முழுப்பட்டினியாக உபவாசமிருத்தல் வழக்கம். முதல் நாள் அமாவாசை அன்றே ஒரு நேர உணவுண்டு விரதமாக இருந்து மறுநாள் உபவாசத்துக்குத் தயார் செய்து கொள்வர். (பொதுவாக உபவாச விரதம் அனுஷ்டிக்கும் போது முதல் நாளும் மறுநாளும் ஒரு நேர உணவே உட்கொள்ள வேண்டும்.) இவ் ஆறுநாட்களிலும் கந்தனுடைய கந்தசஷ்டி கவசத்தை ஒரு நாளுக்கு 36 தடவைகள் பாராயணம் செய்து வந்தால் முருகனுடைய அருளாட்சி கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு ஆறு நாட்களும் விரதம் இருந்து கந்தசஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்து கந்தனுடைய பூரண அருளைப் பெறுவீர்களாக.

தொகுப்பு

**ராஜி**

(ச.த.யு.வி.க)



# அழுகையில் வகைகள்

சின்ன வயதில் அழாதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. இப்போதும் நம்மைச் சுற்றி இருக்கும் சிறுபிள்ளைகள் அழுவதைப் பார்க்கின்றோம். நம் வீட்டுப்பிள்ளைகள் அழும்போது சில சமயங்களில் நமக்கு எரிச்சலாக இருக்கும். ஆனால் அவர்கள் அழுவதை உற்றுக் கவனித்தமேயானால் அழுகையில் எத்தனை வகை இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

***தாய் தந்தையர் தன்னைக் கவனிக்க வேண்டும் என்பதற்கான அழுகை***

இந்த விதமான அழுகை பெரிய சத்தத்தில் ஆரம்பிக்கும். ஆ ஆ ஆ.......... என்று குகை மாதிரி வாய் பிளக்கும். முழு சத்தம் வேண்டுமே என்பதற்காக இரண்டு அலறல்களுக்கு இடையில் மூச்சுவாங்கிக் கொள்ள ஒரு நீண்ட இடைவெளி இருக்கும். இடையிடையே நம் கேள்விகளுக்கும் பதில் சொல்லி விட்டுக்கூட அழுகை தொடங்கும்.

**விசும்பல்**

இது தூக்கத்துக்கு முன்னதாகவோ சாப்பாட்டுக்கு முன்னதாகவோ வரும். தனக்கு என்ன வேண்டும் என்று குழந்தைக்கே தெரியாத நிலையில் வரும் இந்த விதமான அழுகை முசுமுசு என்கிற விசும்பல் சத்தத்தோடு கொஞ்சநேரம் தொடரும். சாப்பிட ஆரம்பித்தாலோ படுக்கை விரிப்பதைப் பாாத்துவிட்டாலோ விசும்பல் நின்றுபோய்விடும்.

**சக்தி வாய்ந்த அழுகை**

வாயே கூடத்திறக்காது குழாயில் இருந்து வழியும் நீர்போல கண்களில் இருந்து நீர் கொட்டும். நியாயமான காரணங்களுக்காக வருகிற உண்மையான அழுகை இது. பலன் கிடைத்ததும் சட்டென்று இந்த அழுகை நின்று போய்விடும் என்பதுதான் விசேஷம்!


**அதிசக்தி வாய்ந்த அழுகை**

இதற்கு முழு உடலின் ஒத்துழைப்பு தேவைப்படும். கண்கள், வாய் தவிரக் கை, கால் மற்றும் வயிறு எல்லாம் கடுமையாக உழைக்க வேண்டும். சத்தமும் பெரிதாக இருக்கும். உடல் மொத்தமும் ஆடும். கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீரும் வராது. பார்ப்பதற்கு இப்படி அழுதால் என்ன கேட்டாலும் வாங்கித் தந்துவிடுவார்கள் என்று தோன்றும். ஆனால் இந்தவகை அழுகையில் கோபமாகிப் போகும் பெரியவர்கள் எதையும் வாங்கித் தரமாட்டார்கள். இந்த அழுகை தொடர உடலில் பலம் இருக்காது என்பதால் அழுகை தோல்வியிலேயே முடியும். இனி யாராவது அழுதால் எவ்வகையில் அழுகிறார்கள் என்று கவனிப்பீர்கள் தானே?


# காகிதத்தில் மின்விசிறி

நூலகம்


1. இரண்டு செ.மீ அகலமும் பதினெட்டு செ.மீ நீளமும் உள்ள மூன்று காகிதத் துண்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.





2. அவற்றை இரண்டாக மடிக்கவும் மூன்று துண்டுகளுக்கும் முறையே A.B.C என்று பெயரிடவும்





3. Aஎன்ற காகிதத் துண்டின் இரு புறமும் Bஎன்ற காகிதத் துண்டை வைக்கவும்.





4. Bஎன்ற காகிதத் தூண்டின் இரு புறமும் Cஎன்ற காகிதத் துண்டை வைக்கவும்.




5. Cகாகிதத்தின் இரு முனைகளையும் காகிதத்தின் உள்ளே செருகவும்




6. அம்புக்குறி காட்டிய திசையில் A.B.C ஆகிய தண்டுகளை மெதுவாக இருக்கவும். படம் 7 இல் காட்டிய காகித மின் விசிறி தயாராக உள்ளது.




7. படம் 8இல் காட்டியபடி திரும்பிப்பிடித்துக் கொண்டு ஓர் உயரமான இடத்தில் நின்றுகொண்டு கீழே விட்டால் காகித மின்விசிறி சுற்றிக் கொண்டு இறங்குவதைப் பார்க்கலாம்.



Pam 813

# அடுக்கு மாடிகளும் அடுக்கான பிரச்சனைகளும்

இன்று இடப்பற்றாக் குறைகாரணமாக அடுக்கு மாடிக் கட்டிடங்கள் நகரத்தில் அதிகமாகிக் கொண்டு வருவது யாரும் யாவரும் அறிந்ததே. இவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான கடைகள் மற்றும் ஏனைய வசதிகளும் அவர்களைத் தேடிக்கொண்டு அவர்களையே நாடி வந்து விடுகின்றன. இது மட்டுமன்றி அவர்களுடைய மின்சாரக்கோளாறுகள் ஏற்பட்டாலோ அதனைத் திருத்தி சரி செய்வதற்குக் கூட 24 மணி நேரமும் ஆட்கள் உள்ளனர். அப்படியிருக்கும் இவ்வடுக்குமாடி கட்டடத் தொகுதிகளில் இருப்பவர்கள் சந்தோஷமாகவும், பாது காப்பாகவும் இருக்கிறார்களா?

இந்த அவசர யுகத்தில் நிற்க நேரமில்லாது ஓடித்திரியும் நாம் எமது வீட்டுக்கு அருகில் இருப்பவர்களைக் கூட அறியாது, தெரியாது இருக்கின்றோம். ஒருவர் ஒரு பெயரைக் குறிப்பிட்டு அவர் உங்கள் கட்டிடத் தொகுதியில் தானே இருக்கிறார் என்று கேட்டால் நாம் விழிக்க வேண்டியிருப்பதுடன் அவர் எமது வீட்டுக்கு அருகில் தான் இருக்கிறார் என்று தெரிந்தவுடன் வெட்கப்பட வேண்டியும் உள்ளது. இந்த நிலையைத் தடுக்க அடுத்த வீட்டில் குடியிருப்பவர்களுடன் எம்மையும் அறிமுகப்படுத்தி அவர்களைப் பற்றியும் அறிந்து வைத்துக் கொள்வது மிகவும் நல்லது.

அடுக்கு மாடி வீட்டுத் தொடரில் வசிப்பவர்கள் வாசலிலே முழு நேரமும் காவலுக்கு காவல் காரர்களை வைத்திருப்பினும் சில விடையங்களில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். வீட்டு வாசலில் மாட்டப்படும் பெயர்ப்பலகையை கொண்டு கள்வர்கள் வீட்டில் திருடவரமுடியும். அதாவது வாசலில் உள்ள காவலாளியிடம் வேறு ஒருவரது வீட்டுக்கு (அந்த அடுக்கு மாடித் தொடரிலே உள்ள) செல்வதாகக் கூறிவிட்டு குறிப்பிட்ட வீட்டுக்குச் செல்லாது வேறு ஒரு வீட்டிற்கு சென்று கொள்ளையடித்து விட்டுச் செல்லமுடியும். எனவே அடுக்கு மாடித் தொடர்களில் இருப்பவர்கள் உங்கள் வீட்டில் நீங்கள் இல்லாத போது யாரும் வந்தால் அல்லது உங்கள் வீட்டிற்கு ஒரு கண்ணை வைத்திருக்கும் வண்ணம் அருகில் உள்ள வீட்டுக்காரரிடம் சொல்லி விட்டுச்செல்லுங்கள்.

இதுமட்டுமின்றி பக்கத்துவீட்டுக் காரரிடம் நல்லெண்ணத்துடனும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளுதல் வேண்டும். இதனால் உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் பிள்ளைகளுக்குக்கூட அவர்கள் உதவியாக இருப்பார்கள். பிள்ளைகள் ஒரே பாடசாலையில் கற்பவர்களாக இருந்தால் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் கல்வியில் உதவிக்கொள்ள முடியும். இதுமட்டுமல்ல, அவர்களை பாடசாலைக்கு அனுப்பும் போது அவர்களின் பிள்ளைகளின் மேற்பார்வையில் அனுப்பமுடியும் அல்லது ஒரு வயது சிறுபிள்ளைகள் ஆயின் ஒரே பாடசாலைக்கு செல்பவர்களாயின் நீங்கள் அவர்களின் பிள்ளைகளைச் சேர்த்து கூட்டிச் செல்வது அவர்கள் அழைத்துவருவது போன்ற சேவைகளைப் பங்கு போட்டுச் செய்து கொள்ள முடியும். இதனால் நேரத்தை சேமிப்பதுடன் உங்களின் வேலைப்பளுவையும் குறைக்க முடியும்.

இது தவிர வேலைகளில் ஈடுபடும் போது பிறருக்குத் துன்பம்தராத வகையில் நடந்து கொள்ளுதல் மிகமிக அவசியம். குறிப்பாக இடித்தல், அரைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடும் போது மிகமிக அவதானமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். உரலை வைத்து இடிக்கும் போது அந்த இடிக்கும் சத்தம் கீழே உள்ளவர்களுக்கு தலையில் அடிப்பதைப் போன்று இருக்கும். எனவே சத்தம் மற்றவருக்கு கேட்காத வகையில் இடிக்கலாம். மற்றும் ஒரு விடையம் குப்பை போடுதல். சில மாடி வீட்டு வாசிகள் குறிப்பாகப் பாதை ஓரங்களில் உள்ள மாடி விடுகளில் உள்ளவர்கள் பாதை ஓரத்தில் போக்குவரத்தாளர்களை சாட்டை செய்வது போல் இருந்த படியே குப்பைகளை சீழே போடுவார்கள். இவ்வாறு செய்வதால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் மட்டுமல்ல, அச்சுற்றாடலும் மாசு அடையும்.மேல் வீட்டில் உள்ளவர்கள் பூச்சாடிகளுள் நீரை ஊற்றும் போது நீரை அவதானமாக விடுதல் வேண்டும். கீழ் வீட்டில் இருப்பவர்களுக்கு வழியும் நீர் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும்.

அதிக சத்தங்கள் ஏற்படுத்துவது பலருடைய கோபத்திற்கு எம்மை ஆளாக்கும். மாடித்தொடரில் இருப்பவர்கள் பிற வீடுகளில் வசிப்பவர்களைக் கருத்தில் கொண்டு வானொலிப்பெட்டி, அதிக ஒளி எழுப்பிக் கதைப்பது போன்றவற்றில் கவனமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் சுகயீனமுற்றவர்கள், கல்விகற்கும் மாணவர்கள், வயோதிபர்கள் போன்ற பலருக்கு ஒலி பல்வேறு விதத்தில் துன்பத்தை ஏற்படுத்தும்.

**தொகுப்பு S. பிரியா**






**கொழும்பு நகரில் செழுந்தமிழ் அருவி எழுந்து வருகுது**
**புதுத்தமிழ் சுருதி**

திருக்குறள் - சைவசித்தாந்த சொற்பொழிவுகள்

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**
(அமைப்பாளர் அகில இலங்கைக் கம்பன் கழகம்)

*அவர்களின் கருத்துக் கடலில்.............*

இன்றே இறங்கிடுவீர்
நன்றே தமிழ் மழையில் நனைந்திடுவீர்.

*பிரதி சனிக்கிழமைகளில் காலை 7.00-8.00 வரை* **சைவசித்தாந்தம்**
*பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.00-8.00 மணிவரை* **திருக்குறள்**

***இடம் சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழக தலைமையகம்.***


## இளந்தலைமுறையினரது நெஞ்சை விட்டு நீங்காத சொல்லாட்சி வித்தகி ஸ்ரீமதி மீனாட்சி பொன்னுத்துரை




கற்றோருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பதற்கிணங்க விளங்கியவர் மீனாட்சி பொன்னுத்துரை. இவர் இந்தியாவில் படித்துப் பல பட்டங்களைப் பெற்றவர். இந்து சமயத்தில் ஆர்வம் கொண்டு சேவையாற்றிப் பலரது பாராட்டுகளைப் பெற்றவர். இந்துசமயத்திற்கு இவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்திலும், இந்து மகளிர் கல்லூரியின் உப அதிபராகவும் இருந்து சேவையாற்றியவர். அது மட்டுமல்லாது சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் ஆலோசகராகவும் இருந்து உதவிபுரிந்தவர். இவரது மறைவிற்கு சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், சங்கநாதம் சஞ்சிகை ஆகியன இணைந்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றன.

# ஆறுமுகனும் உட்பொருளும்

பக்திக்குரிய தெய்வமாகிய முருகன் பல்வேறு தோற்றத்தில் பல்வேறு தலங்களில் காட்சி தந்து அருள் பாலிக்கின்ற முருகனின் ஒவ்வொரு தோற்றத்திற்கும் ஒவ்வோர் உட்பொருள் உண்டு. தமிழ் நாட்டின் ஆறுபடை வீடு என அழைக்கப்படும் ஆலயங்களில் ஆறு விதமாக தெய்வீகத் தோற்றத்திற்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டு.



ஆறுமுகன் என்றழைக்கும் திருவுருவானது ஆரனம், ஐஸ்வர்யம், திரு, வீரம், வைராக்கியம், புகழ் முதலான இறைமைக் குணங்கள் ஆறும் ஆறுமுகங்களிலும் பிரதிபலிக்கும் தோற்றப்பாடு ஆகும். ஆறு திருக்கரங்களிலும் ஆறுபடைக்கலங்கள் தாங்கிய வண்ணம் வள்ளி தெய்வானை சமேதராகவோ அல்லது மயில் மீது அமர்ந்தோ காட்சி அளிப்பவர் ஆறுமுகன்.

அடுத்துக் கந்தன் என்பது திரண்டவன் எனப்பொருள் படும். பல தெய்வங்களின் ஆற்றலும் ஒருங்கு திரண்டவன் என்றும் கொள்ளலாம். கந்து என்றால் கோல் அன்றி தண்டாயுதம் என்றும் கொள்வர். அதாவது தண்டாயுதம் ஏந்தித் துறவுக்கோலமுடன் வீற்றுள்ள பழனியின் திருவுருக்கந்தன் ஆகும்.

இடக்கரத்தை இடுப்பில் வைத்து வலக்கரத்தை அபயமாக வைத்துக் காட்சி தருபவர் சுப்ரமண்யர் ஆவார். (சு+ப் ரமண் யம்) ப்ரமண்யர் என்பது பிரம்மதேஜஸ் ஞானம் என்பன உடையவர் என்பர். பிரம்மகத்திலும் உயர்ந்து வேதத்தில் முந்தியவன் எனவும் பொருள்படும்.

சரவணப் பொய்கையில் அன்னை உமாதேவியாரின் அணைப்பில் உருவானதன் காரணமாகச் சரவணன் என்ற திருவுருவம் பெற்றான்.

கு என்பது ஆன்மாக்களைப் பிடிக்கும் மலங்களைக் குறிக்கும். மரன் என்பது மரணிக்கச்செய்பவன் என்ற பொருளும் சேர்க்குமரன் என்பதற்கு ஆன்மாவைப் பிடிக்கும் மலங்களை அழித்து அருள்பவன் எனக் கொள்வர்.



ஆடும் மயில் உருவை ஓங்காரம் என்பர். மயில் வாகனக் காட்சிதருகையில் வலக்கரத்தில் வேலும் இடக்கரத்தில் வரதமும் வஜ்ரமும் உடையவராய் ஒருதிருமுகத்துடன் காட்சி தருவார்.

சுமாமிமலையில் கந்தன் உபதேசம் செய்த நிலையும், திருச்செந்தூரில் சூரசம்கார வீரனாயும், திருப்பரங்குன்றம், திருத்தணிகை, பழமுதிர்சோலை ஆகியவற்றில் கல்யாண சுந்தரனாயும், அருட்தோற்றமளிக்கும் முனுகனை உள்ளன்புடன் உபாசனை புரிந்து பூசிப்பவருக்கு என்றும் அருள்புரிவான்.

## சிலநிமிடங்கள் சிந்தியுங்கள்

1. மகாபாரதக் கதை எத்தனையாவது வேதம்?
2. சானகர் முதலாகிய இருபத்தாறாயிரம் முனிவர்களுக்கு பாரதக்கதையை கூறிய முனிவர்யார்?
3. அஸ்தினாபுரத்தை ஆண்ட ஜனமேஜயமகாராஜனின் தந்தை யார்?
4. ஜனமேஜய மகாராஜனின் சகோதரர்கள் யாவர்?
5. உதங்கனின் குரு யார்?
6. பயிலவ முனியின் மனைவி உதங்களினிடம் கேட்ட குரு தட்சணை யாது?
7. பிருகு முனிவரின் மகன் யார்?
8. இந்திரனின் மனைவி பெயர் யாது?
9. அசுரர்களின் குலகுரு யார்?
10. அசுரகுலத் தலைவன் யார்?

## விடைகள்

1. 5வது வேதம்
2. சூதமுனிவர்
3. பரிசித்த மகாராஜன்
4. சுதசேனன், பீமசேனன், ஊக்கிரசேனன்
5. பயிலவ முனிவர்
6. பௌடியந்த மகாராஜனின் மனைவி செவியிலுள்ள நாகரத்தினக் கம்மல்
7. சௌனகன்
8. புலோமிசை
9. சுக்கிரபகவான்
10. விடபன்மன்

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

கருத்துள்ள கதை

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவன் பெயர் மகேந்திரன். அரசரும் அவர் அமைச்சரோடு தினமும் இரவில் மாறு வேடம்பூண்டு நகர்வலம் வருவார்கள். அவ்வாறு அவர்கள் ஒருநாள் நகர் வலம் வந்த பொழுது ஒரு வீட்டின் திண்ணையில் ஒரு மனிதன் ஏதோ யோசித்தபடி உட்கார்ந்திருந்ததைக் கண்டார்கள். அரசன் அவனைப் பார்த்த வாறே சென்றார். மறுதினம் அதேநேரம் அந்த மனிதன் முதல் நாளைப் போலவே சிந்தையிலிருப்பதை அரசன் பார்த்தார். உடனே அரசன் அமைச்சரை நோக்கி அமைச்சரே அதோ அந்த ஆளைப்பார்த்ததும் அவனுக்கு ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. நேற்றும் இப்படியே தோன்றியது. அவனைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது ஆனால் ஏன் இப்படி என்மனதில் தோன்றுகிறது. என்று கேட்டார்.

அதைக்கேட்ட அமைச்சர் நன்றாக யோசித்து அரசனிடம் அரசே இரண்டு வாரக்கால அவகாசம் கொடுங்கள் கண்டுபிடித்துச் சொல்கின்றேன் என்று கூறினார். அமைச்சர் அந்த ஆளைப்பற்றிய விபரங்களை அரசு ஒற்றர்மூலம் சேகரித்தார். அவன் சந்தனக் கட்டைகளை விற்கும் வியாபாரி என அறிந்தார். பின்னர் அவர் அரசனிடம் அரசே தம் அரன்மனையில் நிறைய் கட்டில்கள், ஆசனங்கள் அலங்காரகதவுகள் முதலானவற்றை சந்தனமரத்தில் செய்ய விரும்புகிறேன். நம் நகரக்கோயிலுக்கும் சந்தரமரத்தாலான தேர் ஒன்று செய்ய வேண்டும் தங்கள் அனுமதியைக் கோருகின்றேன் எனக்கூறினார். அமைச்சர்கள் விருப்பப்படியே புதிய புதிய கட்டில்கள், ஆசனங்கள், வாசல் நிலைகள், ஆலயத் தேர் முதலியன சந்தனக் கட்டையால் செய்து முடித்து அரண்மனையே சந்தன மரத்தால் நிறைந்திருந்தது.

மாதங்கள் பல சென்ற பின்னர் மீண்டும் அரசர் நகர்வலம் வந்தனர். முன்பு பார்த்த அதே மனிதனைக் கண்ட அரசர் அமைச்சரை நோக்கி அமைச்சரே நினைவில் இருக்கிறதா? அந்த மனிதனை முன்பு பார்த்த போது அவனைத் தண்டிக்க வேண்டும் என்ற குரூர எண்ணம் தோன்றும் ஆனால் இன்று பார்க்கிற போது எனக்கு அவன்மேல் எந்த வெறுப்பும் தோன்றவில்லை. இது ஏன்? உங்களால் விளக்க முடியுமா? என வினவினார்.

விளக்குகிறேன் எனக்கூறினார். அமைச்சரோடு அரசரும் அரண்மனையை அடைந்து நந்தவனத்தில் உலாவும் போது அமைச்சர் அரசே அந்த மனிதன் சந்தனமர வியாபாரியிடம் பலமாதங்களாக



நகரில் சந்தனக்கட்டைகள் யாரும் வாங்காமல் போகவே அந்த மனிதன் மனதில் ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. அரசர் இறந்தால் சந்தனக்கட்டைகள் ஏராளமாக தேவைப்படுமே என்று நினைத்துக்கொண்டிருந்தான். அவன் மனதில் குரூர எண்ணம் இருந்ததால் அவனைப் பார்த்ததுமே உங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. உடனே இப்பொழுது எனக்கு அந்த வெறுப்பு ஏற்படாததன் காரணம் என்ன? எனக்கேட்க அதற்கு அமைச்சர் தாங்கள் அனுமதியின் பெயரில் அரண்மனைக்கும் ஆலய தேருக்குமாக ஏராளமான சந்தன மரங்களை வாங்கினேன். ஆனால் தனக்கு நிறைய வியாபாரம் கொடுக்கும் அரசபிரான் நீடூழிவாழ வேண்டும் என்று நிறைக்கின்றான். அவன் மனதில் அந்த நல்ல எண்ணம் இருக்கும் காரணத்தால் அவனை பார்க்கும் உங்களுக்கும் வெறுப்பு ஏற்றடவில்லை. என அமைச்சர் கூறினார். அதனூடாக விளங்கிக் கொள்வது என்னவென்றால்

ஒருவரைப்பற்றி கெடுதியான எண்ணம் நம் மனதில் ஏற்பட்டால் எதிராளிக்கும் நம்மிடம் ஒரு வெறுப்பே தோன்றும். ஆனால் ஒருவரைப் பற்றி நல்லவிதமான எண்ணத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் அவருக்கும் நம்மிடம் பிரியமும், அன்பும் ஏற்படும். ஆகவே எல்லோரும் நல்லதையே நினைக்கப் பழக வேண்டும்.

## சங்கநாதம் சஞ்சிகை பெறக்கூடிய இடங்கள்

1. சங்கத்தமிழ் இந்துமன்றம்
2. ஸ்ரீ சக்தி இளைஞர் மன்றம், எக்குளாஸ் கீழ்பிரிவு எட்டியாந்தோட்டை
3. வள்ளுவர் இந்து இளைஞர் மன்றம், பனான மாதெனிய வறக்காபொல
4. இந்து இளைஞர் மன்றம், ஒன்தாச்சிமடம், மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடி
5. இந்து இளஞர் மன்றம், 5ம் வட்டாரம் உடப்பூர்.


பண்டன் கொடுமையால் தேவர்கள்
ஸ்ரீநாராயணனைத் துதிக்க ஆரம்பித்தனர்.
பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகமாறி விட்டதே? கோபாலா நீ தான் காக்க வேண்டும்.
தேவர்களுக்கு மனமிரங்கி நாராயணன் தோன்றினார்.
கவலை வேண்டாம் நண்பர்களே!
மாயாவை வரவழைத்தார் நாராயணன்
மாயா.... பண்டனையும் அவன் மந்திரிகளையும் மோகவலையில் சிக்க வை
பண்டன் செய்யும் நற்காரியங்கள் நிற்க அவனை மாயையில் மூழ்கவை....
அழகே உருவான மாயை, அஷ்ட கன்னியரை (எட்டு) உருவாக்கிக் கொண்டு பண்டாசுரன் நீராட வரும் குளக்கரைக்குச் சென்றாள்.




மாயை வீணை மீட்டி மோகனராகம் இசைத்தாள்
காற்றில் மிதந்து வரும் பூபாளராகம், பண்டனையும் அசுரர்களையும் குளக்கரைக்கு மயக்கி இழுத்தது.
குளக்கரையில் எட்டு அப்சரஸ்கள் அமர்ந்திருப்பதைக் கண்டு மயங்கி வியந்தனர். அவர்களிடையே நடுநாயகமாக அமர்ந்திருந்த அழகியிடம் வந்தான் பண்டன்.
ரதியே உன் பெயரென்ன?
சித்திராங்கி
தேனில் விழுந்த ஈயைப்போல் ஆனான் பண்டன். சித்திராங்கியை அழைத்துக் கொண்டு அந்தப்புறம் அடைந்தவன், மஞ்சமே வாழ்வென்று பூஜை, தானங்களை மறந்தான்.
பண்டனை அழைக்க அந்தப்புரம் போனவர்களின் தலை சீவப்பட்டது. பண்டனின் புண்ணியங்கள் தேய ஆரம்பித்தது. தேவர்கள் சுதந்திரமடைந்தனர்.

# ஜோதிடமும் காலமும்

நூலகம்

ஜோதிடசாஸ்திரத்திரங்கள் எல்லாம் இந்துக்களது அடிப்படையான வேதசாஸ்திரத்தினது உபபிரிவுதான் என்று சென்ற இதழில் சொல்லியிருந்தேன். இதற்கு ஆதாரமாக எல்லாப் புராணங்களிலும் பிரபஞ்ச (உலக)த் தோற்றம் விபரிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமத் பாகவத புராணத்தில் அதை மிக விளக்கமாகக் காணலாம். ஸ்ரீமத் பாகவத புராணம் வேத வியாசர் என்று சிறப்பித்துக் கூறப்படும் வியாசமகரிஷி அவர்களால் இயற்றப்பட்டது. பதினேழு புராணங்களை இயற்றிய பின்பும் அவரது மனதில் ஏதோ ஒரு குறை காணப்பட்டதாம். இதனால் அமைதி இழந்திருந்த வியாசமகரிஷி நாரதமகரிஷியின் அறிவுரைப்படி ஸ்ரீ ஹரியின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் ஸ்ரீமத் பாகவதம் என்னும் 18வது புராணத்தை இயற்றியதால் மனம் நிரம்பப்பெற்றவரானார் என்பது வரலாறு.

வேதங்களை அடிப்படை ஆதாரமாகக் கொண்டொழுகும் ஆறு சமயங்களையும் சேர்த்து இந்து சமயம் என்ற பெயரை ஏற்படுத்தியவர் ஸ்ரீ ஆதிசங்கரர் அவர்களே. இதற்கு முன்னர் இவை சனாதன தர்மங்கள் என்றே அழைக்கப்பட்டன. சனாதன தர்மம் என்றால் இயற்கையாகவே அமைந்தது என்பது பொருள். விறகில் தீயினன் பாலில் படு நெய் போல என்று நாயன்மார் கூறுகின்றனர். அதாவது விறகில் தீயிருக்கின்றது. அந்த தீயில் சூடு இருக்கிறது. இயற்கையான குணம் இந்தத் தன்மைதான் தர்மம் எனப்படுகிறது. தர்மம் என்ற சொல் தானம் கொடுத்து தர்மம் செய்வது என்கிறார்களே அதுவல்ல. உண்மையில் தானம் கொடுக்க வேண்டியது மனிதர்களது (கடமை) தர்மாகும். எனவே சனாதன தர்மம் என்றால் மனிதர்களாகப் பிறந்த யாவரும் செய்ய வேண்டிய இயற்கையாக அமைந்துள்ள கடமைகளாகும். இந்த இயற்கையான சனாதன தர்மத்தை முறைப்படி புரிந்து கொண்டு ஒழுகுகின்ற பெருமை இந்துக்களுக்கு மட்டுமே இருக்கிறது. இதனால்தான் இந்து சமயத்திற்குத் தொடக்கமும் தெரியாது அதற்கு



முடிவும் கிடையாது அவ்வளவு ஆழமானது இந்து சமயம்.

ஐந்து விதமான ஆதாரங்களைக் கொண்டே எல்லாம் நடைபெறுகின்றன அல்லது இயங்குகின்றன என்றும் சொல்லலாம். இறைவன் ஜீவன் பிரகிருதி (இயற்கை) காலம், கர்மம் (செயல்) என்பன இவவைந்துமாம். இவற்றில் முதல் நான்கும் மாற்றம் அடையாதவை. ஐந்தாவதான கர்மம் மட்டும் மாற்றமடையக்கூடியது. இங்கே நாலாவதாக காலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே அதுதான் ஜோதிட சாஸ்திரத்துடன் தொடர்படும் விசயமாகும். ஜோதிடப் பலாபலனலங்களில் நல்ல காலம், கெட்டகாலம், காலம் சரியில்லை, காலம் வரவில்லை என்றெல்லாம் சொல்கின்றார்களே அந்தக் காலம் என்ற சொல் இதன் அடிப்படையில் தான் வந்திருக்கின்றது என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் இந்தக் காலம் என்ற விசயம் இறைவனுடனும், ஜீவன்களுடனும் இயற்கையுடனும் கர்மத்து (செயல்) டனும் தொடர்பு பட்டே உள்ளது. இதனால்தான் ஒருவனுக்கு அமையும் யாதகப் பலன்களில் இறைவனது ஆசையினாலும் ஜீவர்களது ஒருமுகப்பட்ட நற்சிந்தனைகளாலும் இயற்கையினது சகலத்தாலும் செயலினதும் சிறப்பினதும் நன்மைகள் கிடைக்கப்படுகின்றன என்று எடுத்துரைக்கப்படுகின்றது. இவற்றுக்கு எதிர் விழைவுகள் இருக்கலாம். அதாவது வேதகோபம், மனிதர்களது பொறாமை முதலிய இயற்கையினது சீற்றம் பிழையான செயல்கள் இவையே விழைவுகளைத் தருகின்றன. காலம் என்பது ஓடிக்கொண்டே இருப்பதனால் உலகில் சகலதும் மாற்றம் அடைந்து கொண்டிருக்கின்றன. இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன என்பதை எல்லாம் இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள்.



**ஆயர்பாடி ராமகிருஷ்ணன்**
(ஜோதிட ஆய்வாளர்)
39 அப்பொன் சோ வீதி
தெஹிவளை
தொலைபேசி 724862




# பொன்னான நினைவுகள்

கலைஞர்கள் இறப்பதில்லை. அவர்களின் கலாசிருஷ்டிகளில் அவர்கள் அமரத்துவம் அடைகிறார்கள். அந்தவகையில் ஹேமமாலினி அவர்கள் ஓவியக்கலையில் டிப்ளோமா பட்டம் பெற்றது மட்டுமல்ல, சமீப காலத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டு ஐ.சி.எஸ் கழகத்தின் (Master Art) மாஸ்டர் ஆர்ட் பட்டமும் பெற்றவர். இவர் பிரவேசிக்காத அழகியல் துறையே (Fine Arts) இல்லை எனலாம். நேர்க் காட்சிச் சித்திரங்கள் (Visual Arts), எண்ணெய் வர்ண ஓவியங்கள் (Oil Paintings), மரச் செதுக்குச் சித்திரங்கள் (Wood Carving), புரவைச் சித்திரங்கள் (Fabric Art), என எத்தனை எத்தனையோ துறைகளில் இவர் வித்தகராக விளங்கினார். புத்தக அட்டைப் படங்கள் பல இவரது கைவண்ணத்தில் உருவாகியுள்ளன.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம், புனித பிரிஜட் கன்னியர் மடம், மெதடிஸ்ட் கல்லூரி ஆகிய வற்றில் மாணவ மணிகளை உருவாக்கிய பெருமை திருமதி ஹேமா கந்தசாமி அவர்களையே சாரும். இந்த விஞ்ஞான உலகத்தில் கூட மாணவர்கள் சமயத்தை மறந்து விடக்கூடாது, ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படுவதற்கு சமயம் நல்ல வழிகாட்டியெனக் கருதி மெதடிஸ்ட் கல்லூரியின் இந்து மன்றத்தின் பெறுப்பாசிரியராகக் கடமையாற்றினார். அத்துடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண, உயர்தரப் பரீட்சைகளின் பிரதான பரீட்சகராகவும் விளங்கினார்.

இவரது கதைகளும், கட்டுரைகளும் உள்ளூர்த் தமிழ்ப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. திருமதி ஹேமா கந்தசாமி சமூகத்தினது நல்வாழ்வுக்காக தன்னையே அழித்துக் கொண்டவர். **அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு** என்ற வள்ளுவர் கூற்றுக்கு இவர் வரைவிலக்கணமாய் விளங்கினார். இவரது அகால மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அவரின் குடும்ப அங்கத்தவர்கள், மாணவசமூகமும் அவரின் அபிலாசைகளும், இலட்சியங்களும், கனவுகளும் நிறைவேற உழைப்போம் என்று திடசங்கற்பம் பூணுவதே அவருக்கு [illegible] அமைய முடியும்!!!



Art skill of late
Mrs.Hemamalini Kandasamy
(Methodist College)



Cover Page Designed By
V.Nilesh - Rotax Limited

Designed & Printed By
Sharp Graphics (Pvt) Ltd